
பூம்-பூம் படலம்!
11-வது ஆண்டு மலர்!
லயன் காமிக்ஸ்
இரு வண்ண முழு நீள காமெடி!
ரூ.5.50

லயன் காமிக்ஸ்

விரைவில்..... வருகிறது!....

# திகில் நகரில் டெக்ஸ்!





வெளியீடு நிர்: 114

ஜூலை / ஆகஸ்டு '95

# ஹாட்லைன்!

வாசக நண்பர்களே,

வணக்கம். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் ஒரு வருஷம் ஓடி விட்டது! யெஸ் - நமது லயனுக்கு பதினொரு வயது பூர்த்தியாகின்றது! மகிழ்ச்சியான இந்த வேளையை மேலும் கலகலப்பாக்க நமது காமெடி கௌ - பாய் லக்கி லூக் இந்த இதழில் காத்திருக்கிறார்!

எக்கச்சக்கமான கதாபாத்திரங்கள் நிறைந்த இந்தக் கதையின் ஹீரோ ஒரு டிரெயின் தான்! வித்தியாசமானதொரு ஹீரோவைச் சுற்றி வரும் இந்தக் கதை - சிரிப்பால் உங்கள் வயிற்றைப் புண்ணாக்கப் போகும் முழு நீளக் காமெடி!

சின்னக் குறை என்னவென்றால் —

இந்த லக்கி லூக் கதைக்கு வழக்கம் போல் முழு வண்ணம் கிடையாது — இரண்டு கலர் மட்டுமே!

இது உங்களுக்கு ஏமாற்றமளிக்கும் சங்கதி என்பது எனக்குத் தெரியும்! ஆனால் — இதழின் விலை ரூ. 7/- என்று வைத்தாலொழிய முழு வண்ணத்தில் அச்சிட இன்றைய இமால ய விலைவாசிகள் இடம் தர மறுக்கின்றன! அவ்விதம் 'சட்'டென்று விலையைக் கூட்டுவதில் நிறைய சிக்கல் உள்ளது! so — வேறு வழியின்றி இரண்டு கலரில் தயாரித்துள்ளேன். இப்போதைக்கு sorry சொல்வது தவிர வேறு வழி தெரியவில்லை எனக்கு! sorry!

சென்ற மாதம் வெளிவந்த ''விபரீத விதவை'' கதைக்கு வாசகர்கள் opinion — 50% — 50%! ''பயங்கரப் பூச்சுற்றல்'' என்று பாதிப் பேரும், ''சூப்பர் கற்பனை'' என்று மீதிப் பேரும்

அபிப்ராயப்பட்டுள்ளனர்! எந்தத் தரப்பினரின் கருத்துக்கு செவி சாய்ப்பது என்ற குழப்பம் எனக்கு! So — இன்னொரு தடவை டிடெக்டிவ் சார்லஸுக்கு வாய்ப்பளித்துப் பார்த்திடத் தீர்மானித்துள்ளேன்! ஓ.கே. தானே?

அடுத்த மாதம் ரிப் கிர்பியின் ''இரத்தக் கரம்'' வரயிருக்கிறது.! (ஹாவ்..! இதே சேதியை ஏராளமான தடவை படித்து விட்டேன். கொட்டாவிதான் வந்துள்ளதே தவிர - ரிப் கிர்பியைக் காணவில்லை'' என்று நீங்கள் சொல்வது கேட்கிறது). இந்தத் தடவை Schedule ல் எந்த மாற்றமும் கிடையாது!

அதைத் தொடர்ந்து மாடஸ்டியின் முழு நீள சாகஸம் ஒன்று வருகிறது! ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவின் பின்னணியில் பின்னப்பட்டுள்ள இந்தக் கதை ஆக்ஷன் ரசிகர்களுக்கு ஒரு விருந்தாக அமையப் போகிறது!

அக்டோபரில் தீபாவளி வரவிருக்கிறது! அதைக் கொண்டாட ''லயன் தீபாவளி மலர்'' ரூ. 12/- விலையில் வருகிறது! நீண்ட காலத்திற்கு முன்பே வந்திருக்க வேண்டிய டெக்ஸ் வில்லரின் முழு நீள சாகஸமான ''இருளின் மைந்தர்கள்'' இந்த வருட தீபாவளி மலரில் இடம் பெறப் போகிறது! திகில் + சஸ்பென்ஸ் + அட்டகாசமான டெக்ஸ் வில்லர் குழுவின் (கார்ஸனும் உண்டு) ஆக்ஷன் என்று உங்களை மெய் மறக்கச் செய்யப் போகும் இதழ் இது!

பன்னிரெண்டாம் வயதுக்குள் அடியெடுத்து வைக்கும் நமது லயன் — மேன்மேலும் பல சாதனைகளைப் புரிந்திட என்றும் போல் உங்கள் வாழ்த்துகளையும், ஆதரவையும் நாடியிருக்கிறது! தொடரும் நம் காமிக்ஸ் பயணம் - இன்று போல் சுவையாய்; சுவாரஸ்யமாய் அமைந்திட ஆண்டவன் அருள் புரிவாராக!

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்! அது வரை jolly reading!

அன்புடன்,
S. விஜயன்
ஆசிரியர்.

*பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 20649.*

# மாதம் ஒரு ஹீரோ



| | | |
|---|---|---|
| பெயர் | : | இது வரைக்கும் தெரிந்த பெயர்கள் : ஸ்டீவ் ராலாண்ட், ஜேஸன் ப்ளை; ராஸ் டான்னர்; இன்னும் எத்தனை பாக்கியுள்ளதோ - கடவுளுக்கும், கதாசிரியருக்கும் தான் வெளிச்சம்! |
| வயது | : | உத்தேசமாய் 35 |
| கல்வித் தகுதி | : | பெயரே தெரியவில்லை - இதில் கல்வித் தகுதிக்கு எங்கே போவதாம்? |
| தொழில் | : | ஓடுவது... தன்னைத் தானே தேடுவது! |
| பொழுது போக்குகள் | : | தோட்டாக்களுக்கு 'டாட்டா' காட்டுவது! |
| விரும்புவது | : | தன் கடந்த காலத்தை அறிந்து கொள்ள |
| விரும்பாதது | : | 'கொலையாளி' என்ற பட்டத்தை! |
| நம்புவது | : | ஜெனரல் காரிங்டன், லெப்டினெண்ட் ஜோன்ஸ் |
| நம்பாதது | : | உலகம் முழுவதையும்! |
| மற்ற பெயர்(கள்) | : | XIII |
| சாதனை | : | பத்தாண்டு காலமாகத் தொடர்ந்தாலும் வாசகர்களை மெய்மறக்கச் செய்தது! |
| நீண்ட கால சாதனை | : | காமிக்ஸ் உலகில் உணர்ச்சி மயமான tragedy டைப் கதைகளுக்கும் இடமுண்டு என்று உணர்த்தியது! விற்பனையில் உலகெங்கும் வரலாறு படைத்திட்ட ஹீரோ இவர்! |

## நமது காமிக்ஸ்களில் XIII

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | இரத்தப் படலம் I | - | திகில் | - | ஜூன் '86 |
| 2. | இரத்தப் படலம் II | - | லயன் காமிக்ஸ் | - | அக்டோபர் '87 |
| 3. | இரத்தப் படலம் III | - | திகில் | - | ஜனவரி '90 |
| 4. | இரத்தப் படலம் IV | - | திகில் | - | ஜூலை '93 |
| 5. | இரத்தப் படலம் V | - | லயன் | - | மார்ச் '95 |


லக்கி லூக் தோன்றும்
பூம் - பூம் - படலம்!
1862ம் ஆண்டு பசிபிக் ரயில்பாதைச் சட்டப்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கிழக்குப் பகுதியையும் மேற்குப் பகுதியையும் இணைக்க புதியதொரு ரயில்பாதை போட முடிவு செய்யப்பட்டது. இப்பாதையை அமைக்க தங்களுக்குத்தான் காண்டிராக்ட் கொடுக்க வேண்டும் என இரு கம்பெனிகள் போட்டியிட்டன...
இந்த இரு கம்பெனிகளின் ஒன்றான பசிபிக் சென்ட்ரல் நிறுவனத்தின் பங்குதாரர்கள் கூட்டம் நடந்து கொண்டிருந்தது-
ஜென்டில் மென், அமெரிக்காவின் பல மாநிலங்களை இணைக்கும் ரயில் பாதைத்திட்டம் பற்றி எனக்கு இப்போது ஒரு தகவல் வந்துள்ளது.
சாக்ரமென்டோவிலிருந்து கிழக்குப் பகுதி முழுவதும் ரயில்பாதை அமைக்க நமக்கு அனுமதி வழங்கியுள்ளனர்!...
அப்படிப் போடு!
ஹிப் ஹிப் - ஹுர்ரே...
அடி சக்கை!
நம்ம டைரக்டர் வாழ்க!
ஆனால் ...ஹ்ம்ம்..... நம்முடைய போட்டி நிறுவனம் பசிபிக் யூனியனுக்கு ஓமஹாவிலிருந்து மேற்குப் பகுதி முழுவதற்கும் ரயில்பாதை போட அனுமதி கிடைத்துள்ளது...
என்னது?
இது பெருத்த அவமானம்!
ஏதோ ஊழல் நடந்திருக்கு!
டொம்! குபுக்! சொத்!
இந்தக் கண்றாவிக்குத்தான் நாங்கள் ஏராளமான பணத்தை இந்தக் கம்பெனியில் போட்டோமாக்கும்?
இதே போல பசிபிக் யூனியன் நிறுவனத்தின் பங்குதாரர்கள் கூட்டம் பிறிதொரு இடத்தில் நடந்து கொண்டிருந்தது.
ஒரு நல்ல செய்தி! நமது கம்பெனிக்கு ஓமஹாவிலிருந்து மேற்குப் பகுதி முழுவதும் ரயில்பாதை போட அனுமதி வழங்கியுள்ளனர்,
பலே! பலே!
அற்புதமான வேலை!
அப்புறம்... ஹ்ம்ம்... பசிபிக் சென்ட்ரல் நிறுவனத்திற்கு சாக்ரமென்டோவிலிருந்து கிழக்குப் பகுதி முழுவதும் ரயில் பாதைபோட அனுமதி கொடுத்துள்ளனர்...
என்னது?


உமது நிர்வாகம் சுத்த மோசம்!
என்னால் ஒன்றும் செய்ய முடியாத நிலை!
நோ நோ மிஸ்டர் டைரக்டர்...
இதற்காகவா வண்டி வண்டியாய் பணத்தைக் கம்பெனியில் கொட்டினோம்?
...ஹி! ஹி! ஹி! பசிபிக் சென்ட்ரல் நிறுவனம் நிச்சயம் வெற்றி பெறப் போவதில்லை! அதற்கு ஐயா வசம் சூப்பர் ஐடியா உள்ளது!
சில மாதங்களுக்குப் பின் சாக்ரமென்டோவில்...
அங்கே பார், ''அடிலைன்'' படகு இங்கே நிற்கிறது!
இந்த ஓட்டைக் கப்பலா?!
!
ADELINE
காட்டுமிராண்டி! என்னுடைய படகைப்பற்றி என்ன சொன்னாய்?
ஆத்திரம் வேண்டாம் கேப்டன்? எங்களுடைய பசிபிக் சென்ட்ரல் நிறுவனத்திற்கு சில பீப்பாய்களில் சரக்கு வந்துள்ளதா எனப் பார்க்கவே இங்கு வந்தோம்!
என்னுடைய சரக்கு மாஸ்டரைப் போய் பார்த்துக் கேளுங்கள்!
மடையன்கள்! மாங்காய் மடையன்கள்!
வணக்கம் தலைவா!
எவ்வளவு தெனவட்டு இருந்தால் என்னோட படகைப் பற்றிக் கிண்டலாகப் பேசுவார்கள்?
அங்கே நிற்கும் அந்தக் கிழட்டுப் படகின் கேப்டன் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?
அதுதான் அந்த 'அடிலைன்' கப்பலின் கேப்டனைப் பற்றிக் கேட்கிறோம்!
கிழட்டுப் படகா?!



சில அடி உதைகளுக்குப் பின்னர்...
சோமாறிக் கழுதைகளா!
வணக்கம் தலைவா!
வெல்! என்னுடைய படகிலிருந்து உங்களுக்கு என்ன வேண்டும்?
பசிபிக் சென்ட்ரல் கம்பெனிக்கு வந்துள்ள வெடிமருந்து பீப்பாய்களை நாங்கள் டெலிவரி எடுக்க வந்துள்ளோம்.... அதற்குரிய தஸ்தாவேஜுகள் இதோ இருக்கு!
ஹ்ம்ம்ம் இது எல்லாம் சரிதான்... ஆனால்
ஆனால் ஏதோ தப்பு நடந்து விட்டது!
நீங்களும் பசிபிக் சென்ட்ரல் நிறுவனத்திலிருந்து வந்திருக்கீங்கன்னு சொல்றீங்க?
யெஸ் கேப்டன்! ஏன்...?
அப்படியானால் இதே சரக்கை கேட்டு வந்த அந்த ஆசாமிகள் யார்?
ADELINE
ஓடிவா! இடத்தைக் காலி பண்ணுவோம்!
ஸ்டாப்!!


சரியான நேரத்தில் சரக்குடன் கிளம்பி விட்டோம்!
ஸ்டாப்!!
இங்கிருந்த பீப்பாய்களை எடுத்துச் செல்ல நீதான் அனுமதித்தாயா? இது பசிபிக் யூனியன் நிறுவனத்தின் போலி தஸ்தாவேஜு மூளை இல்லாத சோம்பேறி முண்டமே!
நங்கூரத்தை எடுத்துவிட்டு படகை வேகமாகச் செலுத்து!
மூளை இல்லாத சோம்பேறி முண்டம்!
வணக்கம் தலைவா!
அவர்கள் நம்மை விரட்டி வருகிறார்கள்!
அப்படியா? அந்த ஓட்டைப் படகைக் கொண்டு ஒரு நாளும் நம்மைப் பிடிக்க முடியாது!
அதேபோல பசிபிக் சென்ட்ரல் நிறுவனத்தால் ஒருபோதும் நம் பசிபிக் யூனியன் கம்பெனியையும் பிடிக்க முடியாது! ஹா ஹா ஹா! வெடி மருந்துகள் இல்லாமல் அவர்களால் குகைப்பாதை தோண்டவே முடியாது!
ஆ! அங்கே பார்! அவர்கள் நம்மை நெருங்கி விட்டார்கள்!


பாஸ்!... பாதுகாப்பு வால்வை அடைக்காதீர்கள்! நாம்... தடுமாறும் அபாயம் ஏற்படும்!
வாயை மூடிக்கொண்டு ஓடுடா ராஸ்கல்!
கடலையொட்டிய சிறையில்-
அமைதியாய் இரு ஜோ! சுவரில் போய் ஏன் முட்டுகிறாய்?
அப்படியாவது சுவர் இடிந்து தப்பிவிட மாட்டோமா என்றுதான்!
வாயை மூடு ஆவ்ரெல்!
ஹா ஹா! திருட்டு ராஸ்கல்... படகை ஓட்டத் தெரியாமல் கரையில் ஏற்றி விட்டான்! படகைச் செலுத்துவது கடினம் என்பது இந்த முட்டாள்களுக்கு இப்போதாவது புரிந்திருக்கும்!
அங்கே பாருங்கள்! படகிற்குத் தீ வைத்து விட்டு ஓடிவிட்டனர்!
கடவுளே! ஜோதான் தன் தலையால் முட்டி சிறையின் சுவரையே இடித்து விட்டான்!
முட்டாள்! வாயை மூடிக் கொண்டு ஓடு!



அதே சமயம் பசிபிக் சென்டரல் தலைமையகத்தில்
நீங்கள் போடும் ரயில் பாதையை பாதுகாக்கும் வேலையை நான் ஏற்க வேண்டுமென்று கேட்கிறீர்களாக்கும்?. யாரிடமிருந்து பாதுகாக்க வேண்டும்? செவ்விந்தியர்களிடமிருந்தா? திருடர்களிடமிருந்தா?
எல்லோரிடமிருந்தும் தான் மிஸ்டர் லூக்!
மிகப் பெரிய தலைவலியாக இருப்பது எங்களது போட்டியாளர்களான பசிபிக் யூனியன்தான்! எங்களது வேலையாட்களுக்கே லஞ்சம் கொடுத்து வேலையில் இடையூறு ஏற்படுத்துகிறார்கள்!
CENTRAL PACIFIC RAILROAD
என்னுடன் வந்தீர்களானால் அவர்கள் செய்த ஒரு காரியத்தைக் காட்டுகிறேன்!
பள்ளம் தோண்டத் தேவையான வெடி மருந்து மீதே அவர்கள் குறிப்பாக கவனம் செலுத்துகிறார்கள்! சரிவர எங்களுக்குக் கிடைக்காதபடிக்கு தொல்லை பண்ணுகிறார்கள்!
வெடி மருந்து கொண்டு வந்த ஒரு வேகன் இந்த இடத்தில்தான் ''பணால்'' ஆனது!
அதற்கு முன்பு படகு ஒன்றில் வந்த வெடி மருந்துகளை தீ வைத்து தகர்த்து விட்டனர். இதுபற்றி கேப்டன் குண்டு பையனுக்குக் கொஞ்சம் தெரியும்...
இதுபற்றி கேப்டன் குண்டு பையன் உங்களிடம் விளக்கமாகப் பேசுவார்-
இந்த நாசவேலைகளைச் செய்த நாய்கள் ஏ..என் கைகளில் கிடைத்தால் நார் நாராய் கிழித்து விடுவேன்!



தற்சமயம் கேப்டனும் அவரது ஓட்டுநரும் ஒரு லோடு வெடி மருந்தை ரயில் மூலம் சியிராவுக்கு எடுத்துச் செல்லப் போகின்றனர்!
ரயில் மூலமா? ரயில் ஓட்ட டிரைவர் எங்கே காணோம்?
எங்களுடைய டிரைவர்கள் எல்லாருக்கும் குளிர் ஜுரம்!
அ...அதனாலே இவர்தான் மிஞ்சினார்...
நா - நான் கூட சுகமில்லாமல் தான் இருக்கிறேன்...!
நா...நான் வந்து மாலுமி! ரயில்வேகாரன் அல்ல! எனக்கு சுகமில்லை! வெடிமருந்துகளைக் கண்டாலே எனக்கு கிலி! நான்... நான்....
வாயை மூடு முட்டாள்! கப்பலோ ரயிலோ நாம் கொண்டு போக வேண்டிய சரக்கு இதோ இருக்கு!
அதே சமயம் சிறையிலிருந்து தப்பிய டால்டன் சகோதரர்கள்...
அவ்ரெல் உன்னை மறைத்துக் கொண்டிருக்கும் இலைகளைத் தின்று விடாதே!
ஆனால் எனக்கு ரொம்ப ரொம்பப் பசிக்குதே... நறுக்... நறுக்.... இதற்கு மேலும் என்னால் தாங்க முடியாது... நறுக்...


ஸ்டாப்! இந்தத் தங்கம் எங்கே போகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்!
அந்தப் பெட்டிக்குள் தங்கம் தான் இருக்கிறது என்று உனக்கெப்படித் தெரியும் ஜோ?
வேறு என்ன இருக்க முடியும்? கனமான பெட்டி... அத்துடன் பலத்த பாதுகாப்பு வேறு...! நிச்சயம் தங்கப் பாளமாகத் தானிருக்கும்!
லக்கி லூக் அங்கே இருக்கிறான்! லக்கி லூக்கே தான்!
இதென்ன பெட்டி? பீப்பாய்களில் ஏதோ வெடிமருந்து பவுடர் கொண்டு போகணும்னு சொன்னீங்களே!
இது வெடி மருந்தில்லை! இதன் பெயர் நைட்ரோ கிளிசரின்!
ஆ? வெடி மருந்து பவுடர் இல்லையா...? சரி, சரி...
நைட்ரோ கிளிசரினு?
நைட்ரோ - க்ளிசரின் என்பது மிக சக்தி வாய்ந்த வெடி மருந்து.


நைட்ரோ கிளிசரினா? லேசாக அதிர்ச்சி ஏற்பட்டாலும் வெடிக்கக் கூடிய திரவம் தானே?
NITRO
யெஸ். மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்!
சார்ஜென்ட், என்னுடைய குதிரையை உங்களிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன்! பயலை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுங்கள்!
அதுசரி, உங்களை யார் கவனித்துக் கொள்வார்களாம் பிரதர்?
குட்லக் மிஸ்டர் லூக்! உங்களுடன் கை குலுக்கி விட்டுப் புறப்படுகிறேன்!
வேடிக்கை பார்த்தது போதும் இடியட்! போய் நங்கூரத்தை மேலே தூக்கு!
வணக்கம் தலைவா!
ஓ...ஒரு நிமிஷம், நான் இங்கிருந்து போய் விடுகிறேன்!
க்கூ க்கூ!
போலாம் ரைட்ஸ்...
இந்த ஆள்தான் என்னைக் கவனித்துக் கொள்ளப் போகிற சூரப்புலியாக்கும்?
அதோ- தங்கத்துடன் லக்கியும் போகிறான்! அவன் எனக்கு வேண்டும்! அவனை எப்படியும் பிடிப்பேன்!
அமைதியாய் இரு ஜோ!


அருகில்-
வழக்கமான வெடிமருந்துப் பவுடருக்குப் பதிலாக நைட்ரோகிளிசரினைப் பயன்படுத்தப் போகிறார்களாக்கும்?!
''அதிரடியாகப்'' போகப் போகுது கதை! ஹி! ஹி! ஹி!
என்ன நடக்குமோ -ஆண்டவனுக்கே வெளிச்சம்!
நான் கீழே இறங்கணும்! நைட்ரோ வெடிக்கப் போகுது!
எனக்கு சின்ன வயசிலேர்ந்தே வெடின்னு ஒரே பயம்!
வாயை மூடு! நாம் கப்பலில் ஏற்றிவந்த வெடிமருந்து பீப்பாய்கள் வெடித்துப் போனதற்கு நஷ்ட ஈடாக இதை நாம் ஏற்றிச் செல்வதுதான் ஒரே வழி!
அதே நேரம் காவல் மையத்தில்-
என்னது? லக்கி லூக்கின் குதிரை தப்பி ஓடிவிட்டதா? ராஸ்கல்! நீ அதைக் கட்டிப் போடவில்லையா?
கட்டிப்போட முடியலை கர்னல்!
குதிரைதான் எ...என்னைக் கட்டிப்போட்டு விட்டது...!
!
உங்களுக்கு என்ன இழவு நடந்தது? உங்களையும் குதிரை நிர்வாணமாக்கி விட்டதா?
நோ... நோ.... கர்னல்....


...நான்கு நடமாடும் புதர்கள் இப்படிச் செய்து விட்டன!
!
ஐயையோ... ஐயையோ... எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கே! இங்கிருந்து போய்த் தொலையுங்கள்!
அந்த "நடமாடும் புதர்கள்" - டால்டன் - சகோதரர்களே!
ஆல்ரெல்! உன்னை மறைத்துள்ள இலை தழைகளை எடுடா மடையா? யாரும் பார்த்துத் தொலைக்கப் போகிறார்கள்!
இது என்னப்பா கதையா இருக்கு! அப்போ என்னடான்னு புதர் மாதிரி வேஷம் போட்டா யாரும் கவனிக்க மாட்டாங்கன்னு சொன்னே...! இப்போது வேஷம் போட்டா தப்புங்கறே!
நைட்ரோ ரயிலைப் பின் தொடர்ந்து இன்னொரு நபரும் கிளம்பியிருந்தார்·
நானில்லாமல் தனியாகப் போகும் ஐடியா எப்படித்தான் ஆசாமிக்கு வந்ததோ? நான் போய் கவனிக்காவிட்டால் ஏதாவது சொதப்பிக் கொண்டு நிற்பார்!
ஜாலியைத் தொடர்ந்து இன்னொரு நபரும் கூட-
ஹேய் பயலே! தொழில் சூடு பிடிக்கப் போகுது! ஜல்தியாகப் போ!
அடடா... என்ன ஒரு வியாபார மூளை!
ஹோல்டான்! ஒரு ரயில் நிலையம் எதிரே கண்ணில் படுகிறது சார்! இங்கு தான் நாம் சரக்கை இறக்கணுமா?
நோ! ரயிலை நிறுத்தி ஸ்டேஷன் மாஸ்டரிடம் இந்த ரயில் நிலையம் வழியாக அபாயகரமான பொருளை நாம் கொண்டு போவது குறித்து தகவல் தெரிவிப்போம்!



ஓ.கே. நங்கூரத்தை கீழே இறக்கு!
ஹையா! ஹையா! கீழே இறங்கலாம்!
நீங்களும் கீழே இறங்கலாம்! ரயிலை நான் பார்த்துக் கொள்கிறேன்!
ஹேய்! பயந்தாங் கொள்ளிப் பயலே! நில்லு!
ஸ்டாப்! உஷ்... உஷ்... ஸ்டாப் - ஸ்டாப்!
இவ்வளவு வேகமாக ஓடாதே! உஷ்,.. உஷ்... வேகமாகப் போகாதே!
விஷ்!
நாசமாகப் போக! எங்கே போய்த் தொலைந்தான் இந்த சோம்பேறி?
உப்??
விடாதே பிடி?
என்னப்பா விஷயம்?
வணக்கம் தலைவா!


என்னடா விளையாட்டு இதெல்லாம்? கேக்கிறேன்... பதில் சொல்லு!
மடேர்!
தூள்!ஸ்டேஷன்மாஸ்டருடன் இவர்களையும் சேர்த்து தண்டவாளத்தில் கட்டிப போடுவோம்! ஹா ஹா ஹா..
கைகளைப் பின்னால் வைத்திருக்கணும்! இல்லையேல் சுட்டுப் பொசுக்கிடுவேன்!
சுட்டுடாதேப்பா...! எனக்கு வெடிச்சப்தம்னாலே ஒரே பயம்! அங்கே ரயிலில் வெடிச்சுடுமோன்னு பயந்து-இங்கே வந்தா - உன் ரூபத்தில் கண்டம் காத்திருக்கு!



''ஒரு அமைதியான, சின்ன ரயில் நிலையத்தில் உங்களுக்கு வேலை போட்டிருக்கிறோம்! ஜாலியாக ரெஸ்ட் எடுக்கலாம்னு'' உத்தியோகத்தில் சேரும்போது சொன்னாங்க...!
கவலைப்படாதே! அமைதியான இடம் நோக்கி விரைவில் போகப் போகிறாய்!
அடுத்து வரும் ரயில் உங்களை அங்கே கொண்டு செல்லும்! ஹி! ஹி! ஹி!
கிளிங்!
ரயில் இவர்களைப் பதம் பார்ப்பதற்குள் நாம் போய் விடுவோம்!
தடிப் பயல்களா!
வணக்கம் தலைவா!
போய்த் தகவல் சொல்லிவர இவ்வளவு நேரமா? நாமே வண்டியைக் கிளப்ப வேண்டியதுதான்!
ஜோராக எஞ்சினை ஸ்டார்ட் பண்ணி விட்டேன்! இனி மெதுவாகப் போகலாம்!
டுமீல்!
!
டால்டன் சகோதரர்கள்! அவர்கள் கையில் நைட்ரோ சிக்கி விட்டால் அதோ கதிதான்! ம்ம்ம்... ஃபுல் ஸ்பீடில் போகணும்!



ஓ... என் தலை சுற்றுகிறதே! எ...என்ன... நடந்தது?
அது ஒரு பெரிய சோகக் கதை கேப்டன்!
அமைதியான வேலை என்று சொன்னதால் நானும் ஒத்துக்கிட்டேன்! ஆனால்...
கிழிஞ்சது போ! இப்போ நாம் ரயில் வரும் தண்டவாளத்தில் உட்கார்ந்து இருக்கிறோம்!
அதுமட்டுமல்ல -ரயில் நம்மை நோக்கி வரும்படி லைனைத் திருப்பி வைத்துள்ளனர்! எல்லாமே வெடித்துச் சிதறப் போகிறது! போச்சு! எல்லாமே போச்சு!
நாம் தொலைந்தோம்!
நல்லவேளை பாதையில் டிராபிக் எதுவுமின்றி இருக்கிறது. இந்த வேகத்தில் பிரேக் போடுவது இயலாத காரியம்தான்!


குச்... குச்... குச்... குச்.... குச்... குச்...
வணக்கம் தலைவா!
ஸ்டாப்!!
ஒரு சின்ன ரயில்வே ஸ்டேஷனில்தான் வேலை என்று சொன்னது எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு!
அடக் கடவுளே? லைன் மாற்றி விட்டுள்ளனர்!? ரயிலை நிறுத்தாவிட்டால் தடுப்பில் போய்தான் மோத வேண்டும்!
கிளிங்
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
ஒரு சின்ன ஸ்டேஷன் -லேசான வேலைன்னு சொன்னாங்க...!
டுமீல்! டுமீல்!


அவர்கள் போய் விட்டார்களா?
பின்னால் கட்டப்பட்டிருந்த கைகளை நீ எப்படி அவிழ்த்தாய்?
என் கைகளை அவர்கள் கட்டவில்லையே! "கைகளைப் பின்னால் வை - இல்லாவிட்டால் சுட்டுப் பொசுக்கிடுவோம்னு' சொன்னாங்க..! துப்பாக்கி சப்தத்திற்குப் பயந்து கைகளைப் பின்னாலேயே வைத்திருந்தேன்!
இவ்வளவு நேரமும் தப்பிக்க ஏதும் செய்யாமல் மாங்காய் மடையன் மாதிரி உட்கார்ந்து கொண்டிருந்தாயாக்கும்?
கோழை ராஸ்கல்! தொடை நடுங்கிப் புழுவே!
ஹேய்! ரயில் நின்றுவிட்டது!
லக்கி லூக் ரயிலில் இருந்து கீழே இறங்கி விட்டான்!
ரயில்வே ஸ்டேஷனுக்குத் திரும்பிப் போக வேண்டும்! கேப்டனையும் அவருடைய ஆளையும் 'அம்போ' வென கைவிட்டுவிட மாட்டேன்!
போச்சுடா... இவன்கள் தொல்லை இன்னும் தீரலையா?
முதலில் ஒரு மறைவிடத்தைத் தேட வேண்டும்!
NITRO


டுமீல்! டுமீல்!
அவன் ஓடிப் போய் விட்டான்! தங்கமெல்லாம் நமக்கே!
முதலில் லக்கி லூக்கை மடக்க வேண்டும்! அவன் தப்பி விடக் கூடாது!
இவர்களிடமிருந்து தப்புவது முடியாத காரியம்! இந்நேரம் மட்டும் ஜாலி ஜம்பர் இருந்தால்...
?
யாரையாச்சும் தேடிக்கிட்டிருக் கீங்களா பிரதர்?
லக்கி லூக் எங்கே போய்த் தொலைந்தான்?
அதோ! ஓட்டம் பிடிக்கிறான்! இந்தக் குதிரை எங்கிருந்து முளைத்து வந்தது?
சைத்தான்! மீண்டும் நம் விரல் நுனியிலிருந்து தப்பி விட்டான்!
அமைதி ஜோ! நமக்குத்தான் தங்கம் கிடைத்து விட்டதே! லக்கி லூக்கை பின்னால் கவனித்துக் கொள்வோம்!...
ரயிலை ஓட்டும் பொறுப்பை நான் எடுத்துக் கொள்கிறேன்!
NITRO



முதலில் ஆபத்தில் சிக்கிக் கிடக்கும் மூவரையும் விடுவிக்க வேண்டும்! டால்டன்களைப் பின்னர் கவனித்துக் கொள்ளலாம்!
வணக்கம் தலைவா!
நீங்களாகவே எப்படித் தப்பினீர்கள்?
இந்தக் கல்லுளி மங்கனை அவர்கள் கட்டிப் போடவில்லை! அவனும் ஒன்றும் செய்யாமல் இருந்துள்ளான் - மாங்காய் மடையன்!
நாசமாய் போச்சு!
ஹேய் இங்கே பார்! டால்டன்கள் நைட்ரோவில் கை வைக்கிறார்கள்!
இந்தப் பெட்டியில் என்ன எழுதி இருக்கிறது?
நை...ட்...ரோ
NITRO
ஏதாவது சாப்பிடற பொருளாக இருக்குமோ?
உளறாதே ஆவ்ரெல்! இந்தத் தங்கம் போய்ச் சேர வேண்டிய இடத்தின் பெயராக இருக்கும்!


அட! ரயில் அதோ வருகிறது!
நம்முடைய திட்டமே நாசமாய் போச்சு!
ஆனால் இந்தத் தடவை நமது திட்டம் நிச்சயம் வெற்றி தான் என்னைத் தொடர்ந்து வாங்க!
அடுத்த ரயில்வே ஸ்டேஷன இந்த முட்டாள்கள் இதே வேகத்தில் கடந்து சென்றால்.... அதோ கதிதான்!
ரயிலின் வேகத்தைக் குறைக்க ஏதாவது வழி செய்தாக வேண்டும்!
ஓ.கே. நாங்கள் பின்னாலேயே வருகிறோம்!
குறுக்குப் பாதையில் போனால் தூரம் குறையும்!
அன்னைக்கே எங்கப்பா சொன்னதைக் கேட்டிருக்கணும்!
குட்! நமக்குப் பின்னால் தான் ரயில் வருகிறது.!
...பேசாமல் அவரைப் போலவே குதிரை வண்டியில் நானும் ஓடிக் கொண்டிருந்தால் இந்த சர்க்கஸ் வேலையெல்லாம் செய்ய வேண்டியிருக்காது!
கூ ...கூ.....கூ.....
ஸ்டாப்!
கடிவாளத்தை அப்படி இழுத்தால் வாய் கிழிஞ்சிடப் போகுது!
பாலம் உடைந்து போய்க் கிடக்கிறது...
ரயிலும் வந்து கொண்டிருக் கிறதே!


அடுத்து என்ன செய்றதா உத்தேசம் பிரதர்?
டுமீல்!
ஸ்டாப்! இது மட்டும் பின்னால் போகுது! வேகனை இழுத்துக்கட்டுங்கள்!
ஐயையோ.... பிடியுங்க..... என்னைப் பிடியுங்க....!
சார் நாம் கொஞ்சம் நின்று....மூச்சு வாங்கிக் கொண்டால்....!
'மூச்' காட்டக் கூடாது! நாம் ரயிலைப் பிடித்தாகணும் கமான்-ஒன்... டூ ... த்ரீ....
வேகமா.... வேகமா... அழுத்து!
ஐயோ!...
ஐயையோ! காப்பாற்ற ஆளே இல்லையா?
ஹேய்.... வண்டியை ரிவர்ஸில் விடு!


?!
NITRO
ஒரு ரயில் நிறைய நைட்ரோ கிளிசரின்! ஒரு பக்கம் சதி காரர்கள்.... மறுபக்கம் திருடர்கள்! இந்த கண்றாவியை சமாளிக்கிறதுக்கு ''அமைதியான வேலை''ன்னு பேராக்கும்? நல்ல எழவுடா சாமி!
இது அநியாயத்தின் உச்ச கட்டம்! என்னை வேறு ஒரு ஸ்டேஷனுக்கு உடனே மாற்றம் செய்ய வேண்டும்!



பிரேக் போடு! கொக்கியை சரியான இடத்தில் மாட்டி விட்டேன்!
ஓ.கே. ஜோ!
இப்ப நான் பெட்டியைத் திறக்கப் போகிறேன்!
நோ....! பெட்டி மீது சுட்டு விடாதே....அது வந்து....வந்து...
டுமீல்!
லக்கிலூக்! என் வழியில் எப்போதும் நீ குறுக்கிடுறே! ஒரேடியாக உன்னைக் கணக்குத் தீர்க்கப் போகிறேன்!
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
செத்தேன்.... செத்தேன்... நான் செத்தேன்....!
சரியாகச் சொன்னாய் பிரதர்....!
... எனவே தான், சவப் பெட்டி செய்ய உன் உடல் அளவை ஏற்கனவே எடுக்கத் துவங்கி விட்டேன்...!


முட்டாப் பயல்கள்! நான் அவர்களது உயிரைக் காப்பாற்றியதைக் கொஞ்சம் கூடப் புரிந்து கொள்ளவில்லை!
.. எனவே என்னை மெய்யாலுமே அமைதியான வேறு ஒரு ரயில் நிலையத்திற்கு உடனே மாறுதல் செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்....!
விடாதே! பிடி...! விடாதே!
வணக்கம் தலைவா!
ம்ம்ம் சீக்கிரம்! இந்த மோசடி ஆசாமிகள் வருவதற்குள் நாம் ரயிலைக் கிளப்பி விடணும்!
உங்களோட அளவை முதலில் எடுக்கட்டுமா?
கிழட்டு ராஸ்கல்!
நோ....நோ...!
வாயை மூடு! வண்டியை முன்னோக்கிக் கிளப்பு!
மா-ற-ற-ம செ-ய்-க ஸ்டாப் மா-ற்-ற-ம் -செ-ய்-க....
கிழிஞ்சது போ! ரயில் திரும்பவும் வருகிறது! ஒரே ஒரு தோட்டா மட்டும் நைட்ரோ மீது பட்டால் போதும்....
நிற்காமல் போய்க் கொண்டே யிருங்கள்...!


குச்....குச்....குச்....
ஹேய்....நம்ம தங்கத்துடன் ரயில் கம்பி நீட்டப் போகிறது!
ரயிலைப் பிறகு பிடித்து விடலாம்! முதலில் லக்கி லூக் தான் வேண்டும்!
சலோர்!
அங்கே பாலம் உடைந்து கிடப்பது அவர்களுக்குத் தெரியாது! உடனே ரயிலை நிறுத்தியாக வேண்டுமே!
ஒரு நிமிஷம் கூட 'அக்கடா'ன்னு ஒக்காந்திருக்க முடியுதா?
வேகமாய் போ! ரயிலைப் பிடிப்பது ரொம்ப முக்கியம் பையா!
திரும்பவும் அதே கூத்தா!
அங்கே ஸ்டேஷனில்
என்னை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்! அமைதியான இடத்திற்கு என்னை அனுப்புங்கள்!
...ஓ பேஷாய் அனுப்பிடலாமே!
...அதற்கு முன்னால் உங்கள் உடலின் அளவை எடுத்துக் கொள்ளலாமா?


ரயிலை இங்கு நிறுத்தி விட்டு லக்கி லூக்கிற்காகக் காத்திருப்போம்!
ஆனால், லக்கி லூக் ' நிற்காமல் போங்கள்' என்று சொல்லிவிட்டாரே, கேப்டன்!
ஸ்டாப்! பாலம் உடைந்துள்ளது!
நான் கத்துவது அவர்கள் காதில் விழவில்லை!
ஸ்டாப்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
கிழிஞ்சது போ! நம்மை நோக்கிச் சுடுகிறார்கள்! இந்தப் பகுதியிலிருந்து முழு வேகத்தில் போய் விட வேண்டும்!
அடக்கடவுளே - என்னுடைய சிக்னல் அவர்களுக்கு தவறான எண்ணத்தைத் தந்து விட்டது! ரயிலின் வேகத்தை அதிகரித்து விட்டனர்!
கவனமாக இரு, டிரைவர்! இல்லையேல் நமது சரக்கிற்கே அபாயம் வந்து விடும்!
மை காட்! என்னால் இந்த அளவுக்குத் தாண்டிப் போக முடியாதே!
என்னால் முடியும் பிரதர்!
''இரும்புக் குதிரைக்கு'' முடியுமென்றால் எனக்கும் முடியும்!



அதே நேரம் ரயில்வே லைனுக்கு வெகுதூரத்தில் உள்ள ஒரு மதுபானக் கடையில்....
நைட்ரோ கிளிசரின் பெட்டி இந்நேரம் நாம் உடைத்துப் போட்ட பாலத்திலிருந்து பள்ளத்தாக்கின் அடியில் போய் விழுந்திருக்கும்....
யெஸ்....அது வெடித்துச் சிதறிக் கிடக்கும் ஹாஹா ஹா...! போய்ப் பார்த்து விடுவோம்!
திடீரென்று
என்னப்பா கொடுமை இது!
குச்..குச்... குச்
இந்தத் தடவையும் தப்பி விட்டது! முயற்சியைக் கை விடுவது தான் நல்லது!
மூச்! என்னிடம் இன்னொரு திட்டமிருக்கு!
இதுவும் நிச்சயமாக சொதப்பி விடும்!
ஜல்தியா பணம் சம்பாதிக்க ஆசையிருந்தால் நான் சொல்வதைக் கேளுங்கள்!
இங்கு நாம் லக்கி லூக்கிற்காகக் காத்திருப்போம்!
ஹலோ கிழவி!
!
அவர் வரும்வரை ஆளுக்கொரு கிளாஸ் போடுவோம்!
ஹலோ லேடி! தாகமாய வந்துள்ள இரண்டு மாலுமிகளுக்கு இரண்டு ஊற்று!
நீங்கள் தானா கேப்டன் குண்டு பையன்?
யெஸ்! ஏன் கேட்கிறாய்?
"அடிலைன்" சரியான ஓட்டைக் கப்பல்!
புர்ர்ர்....


என்னது? என்னோட ''அடிலைன்'' ஓட்டை என்கிறாயா?
யெஸ்
''அடிலைன்'' ஒரு ஓட்டைப் பீப்பாய்!
காயலான் கடைக்குப் போக வேண்டிய சரக்கு!
காட்டு மிராண்டிப் பசங்கள்! தடிமாடுகள்!
இதற்கு உடனே பதில் சொல்லியாகணும்! இப்போது பாருங்க வேடிக்கையை!
வணக்கம் தலைவா! வானில் பறக்கிறீங்களா!
எதிர்பார்த்தபடியே கச்சிதமாய் நடக்கிறது!
ஒழிஞ்சிபோ!
புயல் ரொம்ப சூடாக இருக்கிறான்...
இந்தத் தடவை கூடுதலாகப் பணத்தை வாங்கிக் கொண்டு உங்கள் வேலையைத் துவக்குகிறீர்கள்!
''அடிலைன்'' ஒன்றுக்கும் உதவாது ஓட்டைக் கப்பல்!
''அடிலைன்'' ஒரு நடமாடும் காயலான் கடை!
என்ன திமிர்?
பிரமாதம்! கேப்டன் ரயிலைக் கண்காணிப்பதில் எவ்வளவு தீவிரமாக இருக்கிறான் பார்த்தாயா? ஹா ஹா



திருட்டு கம்மனாட்டிகள்!
ஸ்டாப்!
டுமீல்!
?!?
இதே வேலையை எல்லாக் கதைகளிலும் செய்வதே வாடிக்கையா யோச்சுப்பா!
இன்னொரு தடவை என்னோட கப்பலை எவனாவது லொள்ளு பண்ணினால் தொலைச்சுப் புடுவேன்! - புரிஞ்சதா?
நல்லாவே புரிஞ்சிருக்கும்!
அது சரி. ரயிலை எங்கே விட்டு விட்டு வந்தீர்கள்?
ரயிலா?!
ஐயையோ ரயிலைக் காணோம்! ஒரு ரெண்டு நிமிஷம் நெளிசல் எடுப்பதற்குள் ரயிலை எவனோ திருடிவிட்டானே!



நைட்ரோ ஏற்றப்பட்டுள்ள ரயிலை எந்த முட்டாள் திருடியிருப்பான்?
இது கூடவா தெரியலை? இது பசிபிக் யூனியனின் கைவரிசை தான்!
ரயிலைப் பின் தொடர்ந்தே அவர்கள் வந்து கொண்டிருந்தது தான் தெரியுமே
யெஸ்...ரயிலைக் கோட்டை விட்டு விட்டேனே!
இந்தக் கோமாளிகள் என்னுடைய கப்பலைக் கிண்டல் செய்த உடன் ஆத்திரத்தில் எல்லாவற்றையும் மறந்து விட்டேன்!
என்னது? ''அடிலைன்'' என்பது உங்களுடைய கப்பலின் பெயரா?
அது ஒரு பெண்ணின் பெயர் என்றல்லவா நினைத்தேன்?
பெண்ணோ -படகோ. ஏன் கேலி செய்தாய்?
அப்படிச் செய்வதற்கென்றே எனக்குப் பணம் கொடுத்தனர்!
பார்த்தீர்களா? ரயிலை கடத்துவதற்காக கவனத்தை திசை திருப்பியுள்ளனர்!
நோ! அவர்கள் ரயிலுடன் ஓடிப்போக வில்லை....
!
!
என்ன சொல்கிறாய்?
ரயிலில் யாருமே இல்லை! எஞ்சினை கிளப்பி விட்டு கீழே குதித்து விட்டனர்!
TELEGRAPH OFFICE
சீக்கிரம்! எல்லா ஸ்டேஷன்களையும் எச்சரிக்க வேண்டும்!
பயங்கரமான நைட்ரோ கிளிசரினுடன் ஆள் இல்லாத நிலையில் ஒரு ரயில் வருவதாகச் சொல்ல வேண்டும்!


ரொம்ப தூரத்திற்கு அப்பால் உள்ள ரயில் நிலையத்தில்......
ஜாக்கிரதை! வெடி மருந்துகள் ஏற்றப்பட்டுள்ள டிரைவர் இல்லாத ரயில் நம்மை நோக்கி வருகிறது
பயங்கரமான அழிவிலிருந்து தப்ப ஒரே வழிதான் இருக்கு!
சரியான நேரத்திற்கு வந்து விட்டேன்! ரயிலை இந்த வழியாகத் திருப்பி விட்டால், அது ஆள் நடமாட்ட மில்லாத பழைய ரயில் நிலையத்திற்குத் தான் போகும்! அதனால் பாதகமில்லை...
இதற்கிடையில்
நாம் தவறான பாதையில் வந்து விட்டோம்! இதன் வழியாக எந்த ரயிலும் போயிருக்க முடியாதே!
வேறு எந்த வழியாகப் போயிருப் பான்கள், ஜோ?
கீழே தெரியும் பழைய ரயில் பாதை வழியாகப் போயிருக்கலாம்!
அதே சமயம் அமைதியானதொரு பணியைத் தேடி சென்று கொண்டிருந்தார் ஒரு நபர்!
இந்த பழைய ஸ்டேஷனில் நைட்ரோ ஏற்றி வரும் ரயில்களோ - டுமீல் -டுமீல் திருடர்களோ இருக்க வாய்ப்பில்லை! நிம்மதியாக இருக்கலாம்!
RABBIT GULCH
கைவிடப்பட்ட இந்தப் பழைய லைனுக்கு என்னை டிரான்ஸ்பரில் அனுப்பிய புண்ணியவான் வாழ்க!
இன்னொரு நபரும் கூட அதே பகுதியை நோக்கி வரவிருந்தார்!
என்ன - பழைய ரயில்பாதை வழியாகப் போக வேண்டும் என விரும்புகிறாயா? வினோதம் தான்....ஆனாலும் உன்னுடைய உள்ளுணர்வை நான் ஏற்றுக் கொள்கிறேன்!


அங்கே
சீக்கிரம்! குதிரைகளில் ஏறுங்கள்! தறி கெட்டு ஓடும் ரயிலை நாம் பிடித்தாக வேண்டும்!
இதன் மீதா?
சவாரி செய்திட வேறு மார்க்கமே இல்லையா?
வாயை மூடிக் கொண்டு குதிரை மீது ஏறு!
போகிற வழியில் சவாரி செய்வது எப்படி என்று காட்டுகிறேன்!
டொம்
ஐயோ!
இப்படித் தான் சவாரி செய்யணுமா?
கொஞ்ச நேரம் வாயை மூடிக் கொண்டிருக்கிறாயா? தடிமாடு! கஸ்மாலம்!
சரியான கிறுக்கு!
கொஞ்ச நாழி இந்த மூதேவியை நகரவிடாமல் நன்றாகப் பிடித்துக் கொள்!
நான் மூதேவியா?
காட்டு மிராண்டி!
ம்ம்ம்... கிளம்புங்கள்!
தோழர்களே - பின் தொடர்ந்து வந்து விடுவீர்களா?
ஒரு மணி நேரத்திற்குப் பின்னர்....
ஹி.ஹி.! வெற்றி! வெற்றி! இனி நங்கூரத்தை எடுத்து விடு! நாம் புறப்படலாம்!
பயல்கள் கீழே விழுந்து தொலைக்காமல் பார்த்துக்கோ! இவர்களோடு பெரிய ரோதனையாப் போச்சு!
வலது பக்கம்.....வலது பக்கம்...
நான் இடதுபக்கமாகப் போகிறேன்!
வணக்கம் தலைவா!



நைட்ரோ ஏற்றப்பட்டு, டிரைவர் இல்லாமல் வரும் ரயில் தானே! ஐயா சூப்பராய் ஐடியா பண்ணி ஆபத்தை தடுத்து விட்டாராக்கும்!
பழைய ரயில்வே லைன் வழியாக ரயிலைத் திருப்பி விட்டு விட்டேன்!
அங்கே
அப்பாடா! அமைதியான ஒரு இடத்திற்கு வந்து விட்டேன்...!
குச்....குச்.... குச்....குச்....
???
ரயில்! நைட்ரோ ஏற்றப்பட்டுள்ள அதே ரயில்!
தங்கம் ஏற்றப்பட்டுள்ள ரயில்! ஸ்டாப்! டுமீல் டுமீல் டுமீல்!
திருட்டுப் பயல்கள்! டால்டன் கோஷ்டியினர்!
அமைதியான இடத்திற்கு என்னை மாற்றுவதாகச் சொன்னது பொய்! பித்தலாட்டம்!
ரயிலை நிறுத்து! இல்லாவிட்டால் சுட்டுவிடுவேன்!



வண்டி மெதுவாகப் போகிறது! அட நின்று விட்டதே!
எஞ்சினில் ஒரு பயலையும் காணோமே! நீராவி அழுத்தம் குறைந்து விட்டதால் வண்டி நின்று விட்டது!
தங்கம் இங்கேயே தான் இருக்கிறது, ஜோ!
க்விக்! பெட்டியை கீழே இறக்குங்கள்! இதைத் தேடி லக்கி லூக் இங்கு வரும் முன்பு புதைத்து வைத்து விடுவோம்!
NITRO
நாம் குதிரைகளில் கிளம்புவோம்!
யம்மாடி! பேயாய் கனக்கிறது!
நோ! வெயிட்! இன்னொரு நல்ல ஐடியா!
இதை "அந்த" வண்டியில் மறைத்து வைக்கப் போகிறோம்...!
சவப்பெட்டி ஏற்றிச் செல்லும் வண்டியிலா!
யெஸ்! வண்டியிலிருக்கும் சவப்பெட்டிக்குள் தங்கத்தைப் பதுக்கி வைத்து பத்திரமான தொரு இடத்திற்கு கொண்டு போய் புதைத்து விடுவோம்!
யாருமே நம்மை சந்தேகப்பட மாட்டார்கள்!
அபாரமான ஐடியா, ஜோ!
ஸ்டாப்! உங்களுக்கு ஒரு போணி தயாராக உள்ளது! புதைக்க எடுத்துச் செல்ல வேண்டும்!


யார் -உங்களுடைய உறவினரா?
நோ! ஆனால் அவர் எங்களுக்கு மிகவும் வேண்டியவர். ஹி ஹி ஹி!
ஹா ஹா ஹா!
ஹோ! ஹோ! ஹோ!
ஹி ஹி ஹி!...
யாராக இருந்தாலும் சரி -என்னுடைய வண்டி தயார்.....!
பகுத் அச்சா! நானும் வண்டியுடன் வரப் போகிறேன்!
நீயுமா...? நீ -நீ....உயிரோடு தானே இருக்கிறாய்!
வண்டியை விட்டுக் கீழே இறங்கு! ம்ம்ம்...
உன்னுடைய கோட்டையும் தொப்பியையும் கழற்று....! அதில் தோட்டா பாய்ந்து பாழாகி விடக் கூடாது!
ஏன் ஜோ?
நீ தான் இனி இந்த உடுப்பை அணிந்து கொள்ளப் போகிறாய்!
நானா?
யெஸ்! நாம் இங்கிருந்து கிளம்பப் போகிறோம்!
அந்தப் பெட்டியில் இருப்பதை சவப் பெட்டிக்கு மாற்ற வேண்டும்!
NITRO


பெட்டியைத் திறக்க முடியவில்லை, ஜோ....!
அதை உடைத்து விடு. தாழ்பாளை கோடரியால் ஓங்கி ஒரு போடு போடு!
கோடரியாலா?!! அதுவும் நைட்ரோ கிளிசரின் மீதா...?
விலகிக்கொள்!
NITRO
டுமீல்!
லக்கி லூக்!!...
யெஸ்! சரியான நேரத்தில் வந்து
உன்னுடைய உயிரைக் காப்பாற்றி விட்டேன்!
டுமீல்! டுமீல்!
முடிந்தால் உன் உயிரைக் காப்பாற்றிக் கொள், கௌபாய்!
ரயில் எஞ்சினைக் கிளப்பு! அவனை விரட்டிச் செல்வோம்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
வேலையை ராஜினாமா செய்யப் போகிறேன்! என் வேலையை ராஜினாமா செய்யப் போகிறேன்!


இந்தத் தடவை என்னுடைய குறி தப்பாது!
டுமீல்!
ஸ்டாப்!
அப்படியே போ! அவனைப் போய் பிடி! சீக்கிரம்!
அதே நேரம் பிறிதொரு இடத்தில்.....
பசிபிக் யூனியன் கம்பெனி எம்.டி. நமக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளார்.
தந்திக்குப் பதில் கொஞ்சம் ரொட்டி அனுப்பி இருந்தாலாவது நல்லாயிருக்கும்!! வயிறார சாப்பிட்டிருக்கலாம்!
நல்ல சமாச்சாரம்! அடுத்த வாரத்திற்குள் பசிபிக் சென்ட்ரல் நிறுவனம் குகைப் பாதையை அமைத்து முடிக்காவிட்டால் அந்த வேலை நமக்கு கிடைக்கப் போகிறது!
அப்படி ஆனால், அவர்கள் வேலையை முடிக்காதபடிச் செய்ய வேண்டும்!
நைட்ரோ இல்லாமல் அவர்களால் வேலையை முடிக்க முடியாது! அப்புறம் நாம்....
ஜாக்கிரதை! வெடிமருந்துகள் ஏற்றப்பட்டுள்ள ரயில் வருகிறது! ஸ்டேஷனிலிருந்து எல்லாரும் ஓடுங்கள்!
இங்கிருந்து போவதா? நெவர்! ஆயுசில் முதல் தடவையாக ரயில் சரியான நேரத்திற்கு வருகிற தென்றால் அதை நான் தவறவிடப் போவதில்லை!


இந்தத் தடவையும் அவர்களுக்கே வெற்றி! இந்த முட்டாள் மாலுமிகள் என்னை வெறி கொள்ளும்படிச் செய்யத் துவங்கி விட்டனர்!
துப்பாக்கிக்கு வேலை கொடுத்தால் என்ன பாஸ்?
!
ஆனால், அவர்கள் திருப்பிச் சுட்டால்....?
அந்தக் கடல் நரிகளுக்குச் சுடத் தெரியாது!
நீங்கள் இங்கே இருக்கக் கூடாது!
நோ - நோ! நான் ரயிலில் ஏற வேண்டும்! இந்த மிருகத்தின் மீது ஏற மாட்டேன்!
என்னது மிருகமா?
ஐயோ, ஆண்டவா! என்னைக் கடத்திப் போகிறானே....!
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
மாலுமிகளுக்குத் துப்பாக்கியால் சுடத் தெரியாதுஎன்று எவன் சொன்னது?
ஆனால் இவர்கள் மாலுமிகள் அல்ல.....!
U.S. MAIL
....டால்டன் கோஷ்டியினர்!
டால்டன்களோ வேறு விதமாக சிந்தித்தனர்!
வேகமாக வண்டியை ஓட்டு வில்லியம்! நம்முடைய தங்கத்தின் மீது அவர்கள் கைவைக்க முயற்சிக்கின்றனர்!
கடைசி வாய்ப்பையும் கோட்டை விட்டு விட்டோமோ!
நோ! குதிரைகளில் விரட்டிச் செல்வோம்!
நீங்கள் இங்கேயே இருந்திருந்தால் என்னவாகி இருக்குமென்று பார்த்தீர்களா, மேடம்?
உன்னால் ரயிலைத் தவறவிட்டது தான் மிச்சம்!



அங்கே
முட்டாள் குதிரை எனக்கடியில் ஏன் இருந்து தொலைக்க மாட்டேன்கிறது?
ஹேய்! என் குதிரைக்குத் தலையைக் காணோம்!...
!
ஹோ! நிறுத்து! நங்கூரத்தைப் போடு!
வணக்கம் தலைவா!
என்னையா!
நாம் இங்கிருந்து ஓடி விடுவோம்! இந்தக் காட்டுமிராண்டி கள் நாசமாய் போகட்டும்!
சனியங்கள் ஓடி விட்டன! அடடே.....வேறு ஒரு வழி தென்படுகிறதே
இந்நேரம் நான் மட்டும் ஜெயிலிலேயே இருந்திருந்தால்......அங்கே சாப்பாடாவது கிடைத்திருக்கும்...பசியால் உயிர் போகிறது.....!
ஹலோ மிஸ்டர்....உங்க வண்டியிலே கொஞ்சம் 'லிப்ட்' தாரீங்களா?
என்ன கேட்டீர்கள்?
எங்களை ஏற்றிச் செல்கிறாயா என்று கேட்டேன்!
ஓயெஸ். தாராளமாக!


டுமீல்! டுமீல்!
வேகத்தைக் கூட்டு வில்லியம்! நம்மிடமிருந்து தங்கத்தை அவர்கள் அபேஸ் செய்யப் பார்க்கிறார்கள்!
NITRO
மடேர்!
NITRO
NITRO
வேகத்தைக் கூட்டச் சொன்னால் ரயிலை நிறுத்துகிறாயே!! மூளை கெட்ட முண்டம்!
ஆனால் பாதை இதோடு முடிகிறதே!
வசமாக மாட்டிக் கொண்டோம்!
அவர்களே வந்து விட்டனர்!
வெற்றி! வெற்றி!
அப்படிப் போடு!...
ஹிப் ஹிப் ஹோரே!...


எல்லாத் தடைகளையும் மீறி இந்தச் சைத்தான் ரயில் நைட்ரோவுடன் இங்கு வந்து விட்டதே!
ஆனால் குகைப் பாதை இன்னும் முடியவில்லை!
நம்முடைய மூன்று ஹீரோக்களையும் வாழ்த்தி வரவேற்போம், பசங்களா!
ஹிப் ஹிப் ஹிப்!.... ஹிப் ஹிப் ஹிப்!.... ஹிப் ஹிப் ஹிப்!....
ஹோ ரே! ஹோ ரே! ஹோ ரே!
வாழ்த்துக்கள், மெக்கானிக்!
வாழ்த்துக்கள், கேப்டன்!
வாழ்த்துகள் லக்கி லூக்!
என்னது?
என்னை என்ன சொல்லிக் கூப்பிட்டாய்?
லக்கி லூக் என்று தான்! நீங்கள் லக்கி லூக் தானே?
அமைதியாய் இரு, ஜோ!
ஜோ, அமைதியாய் இரு!
கடைசியாக ஒரு வாய்ப்பு இருப்பதாகவே தெரிகிறது!


மிஸ்டர் லக்கி லூக்!
திருப்பிச் சொல்! மறுபடியும் சொல்!
அமைதியாய் இரு ஜோ!
ஏன் கோபப்படுகிறீர்கள், லக்கி லூக்?
பாவம் லக்கி லூக்! ரொம்ப பதட்டமாக இருக்கிறார்.
என்னை விடுங்கள்!
கொண்டாட்டம் இன்னும் முடியவில்லை, முட்டாள் பயல்களே!
குச்....குச்.... குச்உஉஉ
கடைசியாக ஒரு வானவேடிக்கை பாக்கி இருக்கு! ஹா ஹா ஹா!
குச்....குச்....
இந்தத் தடவை நிச்சயம் வெற்றி பெறுவேன்!
ஜாக்கிரதை! நைட்ரோவுடன் ரயில் ஓடத்துவங்கி விட்டது!



செத்தோம்டா சாமி!
முடிந்தால் பதுங்கிக் கொள்ளுங்கள்....!
ஏன் எல்லோரும் ஓட்ட மெடுக்கின்றனர்?
ஹேய்! தங்கத்துடன் ரயில் தப்பி ஓடுகிறது!
விடக்கூடாது.... கமான்!
பூம்ம்ம்!
ரொம்பத் தாமதமாக வந்து விட்டேன்!...
ரொம்பத் தாமதமாக வந்து விட்டோம்
ரொம்பத் தாமதாக வந்து விட்டோம்
நான் சரியான நேரத்திற்கு வந்து விட்டேன்!



பசிபிக் யூனியன் ஆட்கள் இடைஞ்சல் பண்ணும் முயற்சியில் வெற்றி பெற்று விட்டனரே!
குகையைத் தோண்டும் வேலை இனி அம்பேல்தான்!
நாசம்! சர்வ நாசம்!
நீ யார்?
என்னது - லக்கி லூக்கா? நீயா? அப்புறம் இவங்கள்லாம் யாராம்?
டால்டன் கோஷ்டியினர்!
டா - டா - ல் - ட - னா?!!
டோண்ட் ஒர்ரி... பயல்கள் இப்போதைக்கு எழுந்திருக்கப் போவதில்லை!
ஹெ! ஹெ! ஹெ! தப்புக் கணக்கு லக்கி லூக்! என் கேள்விக்கு பதில் சொல்! தங்கம் எங்கே போனது?
நைட்ரோ என்ற இடத்திற்குச் செல்லும் தங்கத்தைப் பற்றிக் கேட்கிறேன்.. இந்தப் பெட்டியில் இருந்ததே!
அட மரமண்டைகளா! நைட்ரோ என்பது ஒரு இடத்தின் பெயரல்ல -நைட்ரோ கிளிசரின் என்பதன் சுருக்கமான பெயர்தான்!
இந்தப் பெட்டியில் ஒரு பொட்டுத் தங்கம் கூட இல்லையா?
நை - ட் - ரோ - கி - ளி - ச - ரி னா?!


காதிலிருந்து விரலை எடுத்துத் தொலை! வெடிச் சப்தம் தான் நின்று விட்டதே!
என்னது?
வணக்கம் தலைவா!
ஆ.. கேப்டன்! நமது பயணத்தின் நோக்கம் தோற்றுப் போச்சு...
அப்போது
ஹேய்? எங்கிருந்து இந்த மிருகங்கள் திடீரென்று முளைத்தன?
அப்பாடி! ஒரு வழியாக ஒரு குறுக்குப் பாதை கிடைத்து விட்டது!


பிரமாதம்! குகைப் பாதையை அமைக்கும் வேலையை நிறுத்தியாகி விட்டது! என் பரிசை நான் பெறப் போகிறேன்!
என்னது -உன்னுடைய பரிசா?
எல்லா வேலையையும் நீயாகவா செய்தாய்?
என்னங்கடா.. திமிராய் பேசுறீங்க?
டேய்...!
ஹோரே!
!
!
!
ஹோரே!
என்னுடைய வாழ்த்துக்கள்! குகை பாதை
அமைக்கும் வேலை மிக வேகமாக முடிந்து விட்டதே!
வாவ்! சரியான இடத்தில் போய் மோதி ரயில் வெடித்துச் சிதறியது நமது அதிர்ஷ்டம்தான்!
இந்தப் பாதை மட்டும் இல்லாவிட்டால் எக்கச்சக்கமாய் சுற்றி வர வேண்டியிருந் திருக்கும்!
இவ்வளவு வெடி மருந்தையும் ஒரே சமயத்தில் எங்களால் வெடிக்க வைத்திருக்க முடியாது! இதற்குப் பல வாரங்கள் ஆகும்!
ஹேய்! பரிசை வாங்கிக் கொள்ள மறந்து விட்டாயா?
நில்லு! பரிசு வாங்கிக்கோ!



என்னுடைய மோட்ச ரதத்திற்கு எதுவும் ஆகாதது அதிர்ஷ்டம்தான்!
என்னுடைய டிரெஸ் இதோ இருக்கு! ஹேய்... அதைக் கழற்றிக் கொடு!
ஓ... தாராளமாய்..! கண்றாவியான உடுப்பு இது!
என்னது?
பிணம் நாத்தம் நாறுகிறது!
ஹம்ம்ம்... வேலையைத் துவக்கப் போகிறேன்!
செத்துப் போனவர்கள் எல்லாம் எங்கே?
இப்போ மட்டும் உடனடியாகச் சாப்பிட எதுவும் கிடைக்காவிட்டால் நானே பிணமாகி விடுவேன்!
நோ! எவ்வளவோ சோதனைகள் ஏற்பட்ட போதிலும் எல்லாமே சுபமாக முடிந்து விட்டது!
என்னது? இவ்வளவு பெரிய விபத்தில் யாருமே சாகவில்லையா?!
சுபமாக முடிந்து விட்டதா? இது போன்ற 'சுப' முடிவுகள்
ஏற்பட்டால் என் பொழைப்பு என்னாவது?
என்னுடைய தொழிலே திவாலாச்சு!


ஒரேயடியாக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்ளாதே! உனக்காக சில வாடிக்கையாளர்களை வைத்திருக்கிறேன்!
இவன்களா? உயிரோடு இருக்கிறான்களே!
இவர்களை ஜெயில் வரைக்கும் கொண்டு போகணும்!
பொத்!
நல்ல வேளை - வேலை முடிந்து விட்டது! இனி ஒரு போதும் இந்த சைத்தான்கள் மீது சவாரி செய்ய மாட்டேன்!
இன்னும் சில வாடிக்கை யாளர்கள் வருகின்றனர், வண்டிக்காரரே!
பேசாமல் என்னுடைய மோட்ச ரதத்தை - பயணிகளின் உல்லாச ரதமாக்கி விடலாம் போலிருக்கே!
வணக்கம் தலைவா!
தேங்க் யூ லூக்! நீ மட்டும் இல்லாவிட்டால், இந்த விவகாரத்திலிருந்து நான் உயிருடன் திரும்பி இருக்க மாட்டேன்!
ஒரு நேரத்திற்கு ஒருவரைத் தவிர வேறு யாரையும் ஏற்றிச் செல்லக் கூடாது என்பது எங்கள் சங்கத்தின் ரூல்ஸ்
கிழவன் லொள்ளு பண்றானே!
அண்ணன் எதுவுமே பேசமாட்டேன் கிறாரே.. ஊமையோ?
ஹேய், வண்டியை நிறுத்துங்கள்! நானும் வர்றேன்! சாப்பாட்டு நேரத்திற்குள் ஜெயிலுக்குப் போய் விடலாமில்லையா?


வேலைகள் ரொம்ப ஜரூராக நடக்கிறது!
மீண்டும் பணிகள் தொடங்கியதில் ஆட்கள் சந்தோஷமாக உள்ளனர்!
விரைவில் ரயில்வே தடம் சமவெளியைக் கடந்து விடும்!
...அதோ - அங்கேயுள்ள சின்னஞ்சிறு வீட்டின் அருகில் தான் முதல் ரயில் நிலையம் அமைக்கப்பட உள்ளது. அந்த வீட்டுக்காரர் இனிமேல் தனிமையில் தவிக்க வேண்டியிராது!
அந்தப் பக்கமாகப் போவதால் - இந்த நல்ல சமாச்சாரத்தை அங்குள்ளவரிடம் சொல்லி விடுங்களேன், லக்கி!
நிச்சயமாகச் சொல்கிறேன்! குட் லக்! குட் பை!
ஒரு வழியாக நிஜமாகவே அமைதியான ஒரு மூலைக்கு வந்து விட்டேன்! கண்ணுக்கு எட்டும் தூரத்திற்கு ரயில்வே லைன் எதுவுமே கிடையாது! ஹையா! ஜாலி!
இந்த ஆளை நா எங்கேயோ பார்த்திருக் கிறேனே!
கடவுளே! இது என்ன கொடுமை! எனக்கு அமைதியே கிடைக்காதா?
...தனிமையே என் துணைவன்..
முற்று



# வாசகர் கடிதம்

## 'லயன் Top 10 ஸ்பெஷல்'



**எஸ். முஹம்மது ஷரீப்,** **திருச்சி.**

''லயன் Top 10 ஸ்பெஷல்'' மிகவும் நன்றாக அமைந்து விட்டது. ஆனால் இதில் வருத்தத்திற்குரிய விஷயங்கள் இரண்டு! ஒன்று லக்கி லூக் கதையை முழு நீளத்தில் வெளியிடாதது. மற்றொன்று இரத்தப்படலத்தை Top 10 ல் சேர்க்காமல் விட்டது!

**எம். கோபால கிருஷ்ணன்,** **கோவை.**

லக்கிலூக், ஆர்ச்சி, மின்னல் படையினர் ஆகியோரை குறைவான பக்கத்தில் வெளியிட்டு ஒரு நிறைவான கதையைத் தந்துள்ளீர்கள்! மேலும் காரிகன் கதை அசத்தலாக இருந்தது. புதிதாக வந்திருக்கும் மின்னல் மனிதன் நன்றாகவே இருந்தது.

**லெ. வெங்கடேஸ்வரன்,** **C. அய்யம்பாளையம்.**

லயன் Top 10 ல் 8 கதைகள் சூப்பர்! அதுவும் வில்லர், மாடஸ்டி, பிரின்ஸ், காரிகன் ஆகியோர் அசத்தினார்கள். ஆனால் மின்னல் மனிதனும், ஆர்ச்சியும் பெருத்த ஏமாற்றம் அளித்து விட்டார்கள்!

**வி. தங்கவேல்,** **கோவை.**

லயன் Top 10 ஸ்பெஷலின் கடைசிப் பக்கம் வரை விறுவிறுப்புக்கு பஞ்சமேயில்லை. டெக்ஸ் வில்லர், மாடஸ்டி, காரிகன், மின்னல் படையினர் கதைகள் முழு திருப்தியளித்தன. ரிப் கிர்பி இல்லாதது ஏமாற்றம். லக்கி லூக்கிற்கு வெறும் எட்டுப் பக்கம் அளித்தது அநியாயம்!

**ஜி. முத்துக்கிருஷ்ணன்,** **பழவந்தாங்கல்.**

டெக்ஸ் வில்லரின் 'பாலைவனப் பரலோகம்' சூப்பரோ சூப்பர்! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதை இக்கதை உணர்த்தியது!

**ஆர். டி. முருகன்,** **மடிப்பாக்கம், சென்னை - 91.**

டெக்ஸ் வில்லரின் படமும் சிங்கமும் ஜோர்! காமிக்ஸ் உலகின் ராஜா லயனே என்பது போல் 3 சிங்கங்களும் காட்சியளிக்கும் அழகே அழகு! Index Idea Beautiful. இனிமேல் ஒவ்வொரு ஸ்பெஷல் வெளியீட்டிலும் இந்தப் பகுதி கட்டாயம் இருக்க வேண்டும்!

**ஏ. ஆர். வாசன், ஏ. ஆர். துரை,** **சிவகங்கை.**

'மாதம் ஒரு ஹீரோ' சூப்பர். மேலும் அதில் அந்த ஹீரோவின் ஆசிரியர் யார்? அவரின் முதல் சாகஸம் எது? அவரின் பெஸ்ட் சாகஸம் எது? அவருடைய ஓவியர் யார்? என்பது பற்றியும் எழுதினால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.



பரட்டைத் தலை ராஜா
லயன் ஸ்பாட் லைட்!
கதை : வசனம் : சித்திரம்
செ. சங்கர்
1/8 அக்ரஹாரம், பாணாம்பட்டு 605103.
நம்ம மதிப்பு லேசா குறையறா மாதிரி இருக்குதே... அதுக்கு ஒரு வழி பண்ணணும்...
ஹாய்... பரட்டை...
ஆங்... அதுதான் சரியான ஐடியா...
ஏய்... இங்கே வா...
என்ன பரட்டை?...
இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் இக்காட்டின் பிரஜைகள் எல்லாரையும் என்னை வந்து பார்க்கச் சொல்... சீக்கிரம் போடா
சரி பரட்டை...
ஒரு மணி நேரத்திற்குப் பின்...
நான் உங்கள் ராஜா அல்லவா... அதனால் இனி மேல் நீங்கள் அனைவரும் எனக்கு வணக்கம் சொல்ல வேண்டும்... என்னைப் பார்க்கும் போதெல்லாம் வணக்கம் சொல்ல வேண்டும்... இல்லையோ நடப்பதே வேறு...
இதென்ன புதுச்சட்டம் போடுகிறான்
பாவி என்னவெல்லாம் அதிகாரம் பண்ணுகிறான்...
??!!
ம்... போகலாம்.



மறுநாள்-
வணக்கம் மகாராஜா...
ம்... ம்...
மண்டைக்கனம் பிடித்த பயல்...
அப்பப்பா இப்படி உதார் காட்டினாதான் மதிக்கிறாங்க... ம்.
வணக்கம் மகாராஜா...
சரி... ம்...
குட்மார்னிங் ராஜா...
ஆ...
ஐயோ... உதவி...
என்னைக் காப்பாத்துங்க...
நாங்க காப்பாத்தறோம் பரட்டை...
அது பரட்டைதான்


இந்த கயித்தைப் பிடிச்சு ஏறிவா பரட்டை...
சீக்கிரம் இழுங்கடா தடி முண்டங்களா...
பழிக்குப் பழி...
வணக்கம் மகாராஜா...
அடுத்த விநாடி —
அம்மாாா...
டம்... படார்...
என்னோட கட்டளையை வாபஸ் வாங்கிக்கறேன்... என்னைக் காப்பாத்துங்க...
ரெடி ஒன்... டூ... த்ரீ...
பரட்டை மயக்கமடைகிறது —
பரட்டை அம்பேல்...
ஹா... ஹா...
முற்றும்



## வாசகர் "Hot" லைன்!

I. குமார், வில்லாபுரம், மீனாட்சி நகர், மதுரை - 12.

ஆசிரியர் அவர்களே,

உங்கள் மேல் எனக்கொரு கோபம்! எங்கள் அபிமான கதாநாயகர்களின் படங்களை பெரிய ப்ளோ - அப்பாக நமது லயனுடன் கொடுக்கப் போவதாக ஹாட் - லைனில் (பச்சை வனப் பாவை) சொன்னீர்கள்! அதன் பின் வந்த இதழ்களையெல்லாம் வாங்கியவுடன் முதல் வேலையாக உள்ளேதான் பார்ப்பேன்... ப்ளோ - அப் வரவில்லை! வெளியிடுவீர்களா.. இல்லை ஏமாற்றி விடுவீர்களா?

**அசடு வழியும் ஆசிரியரின் பதில்:**

நமது வாசகர்கள் எல்லோருமே - யானை மாதிரி! ஞாபக சக்தி ரொம்ப ஜாஸ்தி என்று சொல்ல வருகிறேன்! தம்மாத்துண்டு விஷயங்களைக் கூட மறக்காதிருக்கும் போது -ப்ளோ - அப் வாக்குறுதியை நீங்கள் மறந்திருப்பீர்கள் என்று நான் எதிர்பார்த்தது இமாலயத் தவறுதான்!

'ப்ளோ - அப்' ஸ்பெஷல் வெளியீடுகளுடன் கட்டாயம் வழங்குவது என்ற தீர்மானத்தில் தான் இருந்தேன்! முதல் ப்ளோ - அப் இரத்தப் படலம் V இதழுடன் தருவதாக ஏற்பாடு! ஆனால்... ஜனவரி '95 லிருந்து அச்சுக் காகிதங்களின் விலை விக்ரமாதித்தன் கதையில் வரும் வேதாளம் போல் உச்சாணிக்குப் போய் குந்திக் கொண்டு விட்டது! இந்த ஜென்மத்தில் அது கீழே இறங்கி வரப் போவதில்லை என்பது தெளிவாகப் புரிகிறது! சுமார் 140 ரூபாய்க்கு விற்ற நியூஸ் பிரிண்ட் ரீம் இன்று 300 ரூபாய்க்கு அடிதடியாகப் போகின்றது! அட்டைப்படம் / ப்ளோ - அப்பிற்கு பயன்படுத்தும் உயர்தர காகிதங்களுக்கும் இதே போல்தான்! ஜனவரி மாதம் 25,000 ரூபாய்க்கு ஒரு டன் பேப்பர் கிடைத்தது. அதே சரக்கு இன்று 42,000 ரூபாய்! இன்னும் கூடலாம்; கூடும்! So - திடீரென்று பத்திரிக்கையுலக economics தலைகீழாக மாறிவிட்டது! விளம்பர வருவாய் இல்லாத - (நம் போன்ற) பத்திரிக்கைகள் தாக்குப் பிடிப்பது எத்தனை கஷ்டமான காரியம் என்பது உங்களுக்கு நிச்சயம் புரிந்திருக்கும்!

இந்த நிலையில் ப்ளோ - அப் கொடுக்க ஆரம்பித்தால் விலையை கணிசமாகக் கூட்ட வேண்டியிருக்கும்! அதில் எனக்கு இஷ்டமில்லை! So - தேர்தல் வாக்குறுதியைப் போல ப்ளோ - அப் திட்டத்தை இப்போதைக்கு பரணில் தூக்கிப் போட்டுள்ளேன்! ஏதாவது ஒரு மாய மந்திரஜாலம் நிகழ்ந்து காகித விலை குறைந்தால் - நீங்கள் கேட்கும் வரைக் காத்திராமல். நானே 'ப்ளோ - அப்' போட்டு விடுகிறேன்! ஓ.கே.யா?

# லயன் Top 10 மார்க் - ஷீட்

| | Comments | மார்க் |
|---|---|---|
| 1. அட்டைப் படம் | முன் அட்டையை விட பின் அட்டை சூப்பர் என்பது ஏகோபித்த கருத்து | 7 |
| 2. டெக்ஸ் வில்லர் | வழக்கம் போல் நம்பர் 1 ஸ்தானம்! ( 10/10 ) | 10 |
| 3. ஆர்ச்சி | 1% பாராட்டு; 99% மண்டையில் குட்டு! | 2 |
| 4. மாடஸ்டி பிளைஸி | டெக்ஸ் வில்லர் கதைக்கு அடுத்த படியாகப் பாராட்டு பெற்ற கதை! | 9 |
| 5. மின்னல் மனிதன் | ஹி! ஹி! ஹி! | 4 |
| 6. ரிப்போர்டர் ஜானி | கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது! ஜானியா கொக்கா? | 8 |
| 7. ஸ்பைடர் | வாசகரின் படைப்பு என்பதால் சுமாரான கதையம்சத்தை overlook பண்ணலாம்! | 7 |
| 8. லக்கி லூக் | கதையும், கலரும் ஓ.கே. தான்! ஆனால் முழு நீளக் கதைக்கு ஈடாகுமா? | 6 |
| 9. கேப்டன் பிரின்ஸ் | சுமார்! (வசனங்கள் ஜாஸ்தி) | 6 |
| 10. மின்னல் படை | சுமாருக்கு கொஞ்சம் கூடுதல் ரகம்! | 7 |
| 11. காரிகன் | பிரமாதமான கதை! சூப்பர் ஆக்ஷன் ( 10/10 ) | 10 |
| 12. கார்டூன் & புதிய பகுதிகள் | சூப்பர் | 9 |
| | மொத்தம் | 85/120 |

# மாதம் ஒரு வாசகர்



| | | |
|---|---|---|
| *பெயர்* | : | **M. சோமசுந்தரம்** வயது : 25 |
| *முகவரி* | : | 16, தண்டு பாதை தெரு, அண்ணாசாகரம் P.O., தருமபுரி (Dt.) - 636 704. |
| *கல்வித் தகுதி* | : | S.S.L.C. |
| *பொழுது போக்குகள்* | : | கமல் படங்களை விரும்பி பார்ப்பது, படித்து முடித்த பின் தவறாது கடிதங்கள் வரைதல், பழைய பாடல்கள் கேட்பது |
| *லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்?* | : | என் உயிர் நண்பன் வெங்கடேஷ் பாபு 6 வருடங்களுக்கு முன் லயன் காமிக்ஸ் கொடுத்ததாக ஞாபகம். |
| *லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி?* | : | தொடர்ந்து படித்தேன். நானே இதில் ஐக்கியமாகி இப்போது நானும் என் நண்பர்களும் தொடர்ந்து சுவைக்கிறோம். |
| *நீங்கள் படிக்கும் இதர பத்திரிகைகள்* | : | ராணி காமிக்ஸ், நாவல்கள், குமுதம், ஆனந்த விகடன், சினிமா எக்ஸ் பிரஸ், பிலிமாலயா, ஜெமினி சினிமா |
| *இதுவரை வந்த கதைகளில் பிடித்தது* | : | எத்தனுக்கு எத்தன், பாதாள போராட்டம், ஸ்பைடர், ஆர்ச்சி வெறி ரசிகன், |
| *உங்களை தவிர வீட்டில் வேறு யாரும் படிக்கிறீர்களா?* | : | செந்தில், நந்தினி, கஸ்தூரி, நளன் சபரி |
| *படித்து முடித்த பின்* | : | இதயத்தில் பூட்டிவிட ஆசை (பீரோவில்) |
| *வெறுப்பது* | : | **வேறு யாராவது ஓசியில் லயன் காமிக்ஸ் கேட்டால் கண்டிப்பாக கொடுக்க மாட்டேன்** |

**MY LIFE IS LION COMICS**

## க்ரைம் க்விஸ் - 19 விடை

"லயன் Top 10 ஸ்பெஷல்" இதழில் வெளியான க்ரைம் க்விஸ் 19க்கு ஏராளமானவர்கள் சரியான விடையை எழுதி இருந்தனர். குலுக்கல் மூலம் பரிசு பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள் :

1) **V. வினோத் பிரபு குமார்,**
S/o. K. வேலுசாமி கவுண்டர்,
D. காளிபாளையம் - 642 005.
பொள்ளாச்சி (T.K.)

2) **இரா. கார்த்திகேயன்,**
133, தியாகி அண்ணாமலை நகர்,
திருவண்ணாமலை - 606 601.

3) **S. லெட்சுமி நரசிம்மன்**
A-75, M. P. T. Colony,
தண்டையார் பேட்டை, சென்னை - 600 081.





### விடை

எந்தக் கணவனாவது வயிற்றில் பிள்ளையுடன் இருக்கும் மனைவியிடம் பெரிய பெட்டியைக் கொடுத்து விட்டு, சின்ன பெட்டியை தான் எடுத்துக் கொள்வானா? அதைக் கொண்டுதான் இன்ஸ்பெக்டர் டேஞ்சர் போலி என்று கண்டு பிடித்தார்!

## க்ரைம் க்விஸ் - 20 விடை

"லயன் Top 10 ஸ்பெஷல்" இதழில் வெளியான க்ரைம் க்விஸ் 20க்கும் ஏராளமானவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பியிருந்தனர். குலுக்கல் மூலம் பரிசு பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

1) **V. ஐயப்பன்,**
குமரன் ஏஜென்சீஸ்,
47-A, பெருமாள் மேற்கு ரத வீதி,
திருநெல்வேலி - 627 001.

2) **ஜெ. நவீன்,**
24, லெட்சுமிபுரம்,
மூன்றாவது தெரு,
மதுரை - 625 001.

3) **C. காசிராமன்**
S/o. K. செல்லத்துரை,
காந்திநகர், மேட்டுக்காடு ரோடு,
ராசிபுரம் (T.K.), சேலம் (D.T.)

### விடை

காமெரா ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை இயங்குகிறது. எனவே முதல் படத்தில் உள்ள கடிகாரத்தின் நேரமும், இரண்டாவது படத்திலுள்ள கடிகாரத்தின் நேரமும் ஐந்து நிமிடம் வித்தியாசம் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால் போட்டோவில் கடிகாரத்தின் நேரம் மாறவில்லை. இதை இன்ஸ்பெக்டர் டேஞ்சர் கவனித்து விட்டதால் தில்லுமுல்லு நடப்பதை அறிந்து கொண்டார்.

## க்ரைம் க்விஸ் - 22 கூப்பன்

இம்மாத க்ரைம் க்ரைம் க்விஸ் (22)க்கு விடையனுப்பும் போது கீழேயுள்ள கூப்பனை ஒட்டியனுப்ப மறந்து விடாதீர்கள்.

**க்ரைம் க்விஸ் (22)**
**C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,**
**த. பெ. எண். 374, சிவகாசி - 626 123.**

**விடைகளை போஸ்ட் - கார்டில் மட்டுமே அனுப்ப வேண்டும்.**
**போட்டிக்குக் கடைசித் தேதி : 10-6-95**

## புக் மார்க்கெட்

### தேவை

இரும்பு மனிதன்
பாதாளப் போராட்டம்
கொலைப்படை
கடத்தல் குமிழிகள்
லயன் சூப்பர் ஸ்பெஷல்
(வெ. எண். 42)
சூப்பர் ஸ்டார் ஸ்பைடர்

### விற்பனைக்கு

இரத்தப் படலம் IV
விசித்திரப் போட்டி

**N. சுரேஸ்**
8/103, A-28,
காளியப்ப செட்டி காலனி
குமாரசம்பட்டி P.O.
தருமபுரி - 3.

### தேவை

இரத்தப்படலம்
I முதல் IV பாகங்கள்

**T. சபாபதி,**
ஹோட்டல் கோல்டன் சான்ட்,
வேளாங்கண்ணி - 611 111.

### தேவை

கடத்தல் வலை
கடத்தல் குமிழிகள்
சைத்தான் விஞ்ஞானி
மிஸ்டர் மர்மம்
கொலைப்படை
யார் அந்த ஜூனியர் ஆர்ச்சி
எமனுக்கு எமன்
மீண்டும் ஸ்பைடர்
லயன் 5வது ஆண்டு மலர்
ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி

### விற்பனைக்கு

டாக்டர் டக்கர்
கராத்தே டாக்டர்
பாதாளப் போராட்டம்
காமெடி கர்னல்
வெள்ளைப் பிசாசு
கொலைகாரக் காதலி
துப்பாக்கி முனையில்
கொலைப்படை

**P. கண்ணன்,**
27-A, வரதராஜபுரம்,
கம்பம்.



சிரிப்பின் நிறம் சிவப்பு!
கிளம்பலாமாடா கண்ணா?
ஒரு நிமிஷம் இருங்கம்மா.. ஒரு சின்ன வேலை பாக்கியுள்ளது!
நான் எங்க வீட்டோட ஊருக்குக் கிளம்புறேன்..!
நீ ஊருக்குப் போய் விட்டால் எனக்கு ரொம்ப போரடிக்கும் கண்ணா!
அப்படியா? அப்படீன்னா நான் கேட்கப் போறதைக் கேட்டு கோபிச்சுக்க மாட்டே!
என்ன கேட்கப் போறே?
ம்ம்ம்... வந்து.. வந்து.. எனக்கு கூச்சமா இருக்கு!
கேட்டுப் பாரேன்... கேட்டுத்தான் பாரேன்...
வ - வந்து - வந்து - இதுவரைக்கும் எந்தப் பொண்ணு கிட்டேயும் நான் இதைக் கேட்டதே கிடையாது!
அட - சும்மா கேளேன்...!
ஓ.கே.!
நான் ஊர்லிருந்து வர்ற வரைக்கும் என்னோட தவளையைப் பத்திரமா பாத்துப்பியா?


இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் - க்விஸ்
23
இதோ — இந்தக் கோமாளி முகமூடியணிந்த ஆசாமி உள்ளூர் பாங்கிலிருந்து ஒரு லட்சம் டாலர் திருடியிருக்கிறான்!
வீடியோ காமெரா படம் பிடித்து வைத்திருந்த போதும்....
...... பயல் முகமூடி அணிந்திருப்பதால் அவன் யாரென்பது தெரியவில்லை!
சார்..... ஒரு துப்புக் கிடைத்துள்ளது! ஒரு அனாமதேய போன் வந்தது!
பாங்கில் கொள்ளையடித்தது பழைய கேடி ஜோ தானாம்!
ஆனால் ஜோ இந்தத் தொழிலைக் கைவிட்டு ரொம்ப காலமாச்சே ஆல்பி!
இ - இன்ஸ்பெக்டர் டேஞ்சரா?
ஹலோ ஜோ...... இன்னைக்கு நடந்த பாங்க் கொள்ளை உன் கைவரிசையா?
என்ன சார்.... நான் திருந்தி பல வருஷம் ஆச்சு
உன் வீட்டைச் சுற்றிப் பார்க்கலாமா?
ஹம்ம்ம்..... இங்கே ஒண்ணுமில்லை!
இதோ பாருங்க் சார்.....!
பின்னாலிருந்த பெட்டியில் இந்த முகமூடி கிடந்தது சார்!
அ - அது என்னது இல்லை சார்!
யாரோ என்னை வம்பில் மாட்டி விட பண்ணும் ஏமாற்று வேலை இது!
ஆல்பி..... ஆசாமி சொல்வது உண்மையா - பொய்யா?
கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

கதை சொல்லும் படங்கள்
கட்டுரைத் தொடர் அடுத்த
இதழில் வருகிறது — Sorry





லயன் காமிக்ஸ்
விரைவில் வருகிறார்!
மிஸ்டர் மகாராஜா!
ரூ.6/=
"சிக்பில்" குழுவினரின் முழு நீள நகைச்சுவை விருந்து!



அக்டோபரில் வருகிறது!
லயன் காமிக்ஸ்
லயன் தீபாவளி மலர்!
இருளின் மைந்தர்கள்!
சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லரின் முழு நீள அதிரடி சாகஸம்!
விலை ரூ. 12/-